2008 நவம்பர் 11] [பேரவைத் தலைவர்]

ஆசிரியர்கள் இல்லாததால், மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து ஆகிய இந்த ஐந்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை இன்று சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) தமிழகத்தில் உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில், உரத் தட்டுப்பாட்டால் தமிழ்நாடு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அ.தி.மு.க. சார்பாகவும், திரு. சி. ஞானசேகரன் அவர்கள் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாகவும் விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன்.

இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். அ.தி.மு.க. சார்பாக யார் முதலில் பேசுவது? (குறுக்கீடு) முதன்முதலாக அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், உங்களைப் பேச அழைத்தாகிவிட்டது. நீங்கள் பேசுகிறீர்களா அல்லது அடுத்த உறுப்பினரை நான் கூப்பிடவா? (குறுக்கீடுகள்) பேசுங்கள். நான் சொல்லியாகிவிட்டது, நான் உங்களைப் பேசச் சொல்லிவிட்டேன். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிட்டால், நீங்கள் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–05

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) சபையைக் கட்டுப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பில், நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுகிறீர்களா? சரி, திரு. ஓ. பன்னீர்செல்வம், பேசுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் கவன ஈர்ப்பில் எங்கள் கட்சியின் கொறடா திரு. செங்கோட்டையன் அவர்களைப் பேச அழைத்தீர்கள். (குறுக்கீடுகள்) இவர்களை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். அவரால் பேச முடியவில்லை. (குறுக்கீடுகள்)

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் நின்றுகொண்டு கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களின் உணர்வு எல்லோருக்கும் இருக்கின்றது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இரண்டு பேரில் யார் முதலில் பேசுகிறீர்கள்? நான் பேசச் சொன்னவுடன், நீங்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) மைக் உங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அவ்வளவுதான் நான் சொல்வேன். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், தங்கள் கவனத்திற்கு சில பிரச்சினைகளை எழுப்புவதற்காகத் தங்கள் அனுமதியைக் கோருகிறார்கள். என்ன பிரச்சினை என்பதை நீங்கள் கேட்டுக்கொண்டு, அதை எப்பொழுது எழுப்ப நீங்கள் அனுமதிப்பீர்கள் என்பதைத் தெரிவித்தால், தொடர்ந்து மற்ற அலுவல்கள் நடப்பதற்குத்